<u>**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**</u>

<u>**அசல் வழக்கு எண்.163/2024**</u>

பெயர்–திரு.பாவியப்பன் நாள்.10.04.2026

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**1)** எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி முத்துகிருஷ்ணன் சொல்லித்தான் வழக்கு விவரம் தெரியும். அவர் சொல்லித்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி குடும்பத்திற்கு எந்த காலையில், எவ்வளவு சொத்து உள்ளது என்றால், எனக்கு தெரியாது. எந்த வருடம் பாகம் பிரித்துக் கொண்டார்கள், அதில் யார் யாருக்கு எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரியாது. தென்வடல் தார்ரோட்டிலிருந்து கிழக்கு நோக்கி 120 அடி வந்தவுடன், வாதி முத்துகிருஷ்ணன் பூமி உள்ளது. மேற்படி 120 அடி கிழமேல் தடம் எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால், 30 ஆண்டுகளாக உள்ளது. வாதியின் பூமிக்கு மேபுறமாக யார் யார் பூமி உள்ளது என்று எனக்கு தெரியாது. மேபுறமுள்ள பூமிதாரர்கள் அனைவரும் 120 அடி கிழமேல் தடத்தில்தான் தென்வடல் ரோட்டை சென்றடைகிறார்கள் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. வாதியின் பூமிக்கு மேபுறம் எத்தனை நபர்கள் பூமி உள்ளது என்றால், சுமார் 10 நபர்கள் பூமியிருக்கும். வாதியின் பூமியைத் தாண்டினால், மேபுறமுள்ள பூமிதாரர்கள் அவர்களது பூமியை சென்றடைய முடியும் என்றால், சரிதான்.

**2)** எனது பிரமாணவாக்குமூலத்தில், கிழமேல் தார்ரோட்டிலிருந்து நேர் வடக்காக வரும் தடமானது, எந்த காலையில், எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்றால், தெரியாது. வாதியின் பூமிக்கு மேபுறமுள்ள பூமிகாரர்கள் அனைவரும், தென்வடல் தார்ரோட்டிலிருந்து கிழமேல் 120 அடி தடத்தின் வழியாக வந்து, வடக்கு நோக்கி அவர்களது பூமிக்கு செல்லமுடியும் என்றால், சரியல்ல. அங்கே மற்ற நபர்கள் செல்ல தடம் இல்லை. நான் பூமியில் இருக்கும் தடத்தை இல்லை என வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களில் கிழமேல் 120 அடி தடத்தின் வழியாக வடக்கு நோக்கி சென்று, மற்ற பூமிகாரர்கள் அவர்களது பூமியை அடையும் வகையில் வண்டித்தடம் காட்டப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான்

வருவாய்துறை ஆவணங்களில் உள்ள தடத்தை தெரிந்துகொண்டே, அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.10 17:18:02 +0530

District Munsif